2010 ஜனவரி 9] [திரு. டி. செங்குட்டுவன்]

இதேபோல், அரவாணிகளையும் 'திருநங்கைகள்' என அழைத்துச் சிறப்புச் செய்து, அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கி, அவர்களையும் மனிதப் பிறவிகளாய் நடமாட விட்டிருக்கிறார். இப்படியெல்லாம் செய்வதால்தான் ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காண்கிறார் கலைஞர். கலைஞருக்கு ஏழைகள் இறைவன் என்றால், நமக்குக் கலைஞர் அவர்கள்தான் இறைவன்.

ஒற்றைச் சாளர முறை சேர்க்கை எங்கெல்லாம் இருக்கிறதோ, அந்தக் கல்லூரிகளிலே, அதாவது அரசுக் கல்லூரிகளிலே, அந்தச் சேர்க்கை முறையிலே சேர்க்கை பெறும் மாணவர்களின் குடும்பத்தில் இதுவரை யாரும் பட்டதாரிகளே இல்லையானால், அத்தகைய மாணவர்கள் தொழிற்கல்வி படிப்பதை ஊக்குவிக்க சாதிப் பாகுபாடின்றி, வருமானப் பாகுபாடின்றி, வரும் கல்வியாண்டு முதல் அம்மாணவர்கள் செலுத்த வேண்டிய முழுக் கல்விக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கல்வி வளர்ச்சியிலே, பெருந்தலைவருக்குப் பின்னால் உருவான ஓர் அருந்தலைவர் கலைஞர்தான் என்பதை இன்றைய மாணவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்த அறிவிப்பு என்பதை இந்த அவை ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறேன்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்பதைக் கோடிட்டுக் காட்டும் கலைஞரை இன்று அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்கள் பெற்றோர்கள்.

'அவசர கால ஆம்புலன்ஸ் சேவை 108' என்பது இன்றைய மக்களின் உயிர்நாடியாகியுள்ளது. செப்டம்பர், 2008-இல் அறிமுகமான இத்திட்டத்தினால் இதுவரை மிக ஆபத்தான நிலையிலிருந்த 12,400 நோயாளிகள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். 2,30,000 நோயாளிகள் இதனால் பயனடைந்திருக்கிறார்கள். 30,000 கர்ப்பிணிப் பெண்கள் இதனால் பயன் பெற்றிருக்கிறார்கள். செல்லும் வழியிலேயே இந்த ஆம்புலன்சில் சில அவசர சிகிச்சைகளுக்கும் வசதிகள் செய்திருக்கிறார்கள். இப்படியாக, உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்போல் உயிர் காக்கும் இத்திட்டத்தால், தமிழகமே இன்று இலவசமாய்க் காக்கப்பட்டு வருகிறது.